# தமிழகக் காசுகள்

(அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்)



அளக்குடி ஆறுமுகசீதாராமன்

# தமிழகக் காசுகள்

(அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்)

ஆசிரியர்

அளக்குடி ஆறுமுகசீதாராமன்

வெளியீடு

**தனலட்சுமி பதிப்பகம்**

12, ராஜராஜன் நகர்,
மானோஜிப்பட்டி (தெற்கு),
தஞ்சாவூர் - 613004.

முதற்பதிப்பு : மார்ச் - 2002
தனலட்சுமி பதிப்பகம்
தஞ்சாவூர்.

ஆசிரியர் : அளக்குடி ஆறுமுகசீதாராமன்

பிறந்த தேதி : 20-01-1968

உரிமை : ஆசிரியருக்கு.

அச்சிட்டோர் : விஜய் ஆப்செட் அச்சகம்,
61/1c, டி.பி.ரோடு,
மகப்பூப்பாளையம்,
மதுரை - 625 016.
தொலைபேசி : 603464

நூல் கிடைக்குமிடம் : ஆ.சீதாராமன்,
12, ராஜராஜன் நகர்,
மானோஜிப்பட்டி தெற்கு,
தஞ்சாவூர் - 613 004.
தொலைபேசி : 346120

விலை : ரூ. 60

# பொருளடக்கம்

பக்கம்

முன்னுரை i

1. தஞ்சையில் கிடைத்த முத்திரைக் காசு 1

2. சங்ககாலச் சேரர் காசுகள் 2-3

3. சங்ககாலச் சோழர் காசு 4

4. சங்ககாலப் பாண்டியர் காசு 5

5. சங்ககால மலையமான் காசு 6

6. சங்ககால அதியமான் காசு? 7

7. விஷ்ணுகுண்டர் காசு 8

8. பல்லவர் காசு 9

9. சீனர் காசு 10

10. வேணாட்டரசனின் வெள்ளிக்காசு 11

11. பிற்காலச் சோழரின் தமிழ்க்காசு 12

12. பிற்காலப் பாண்டியர் காசு 13

13. மூன்றாம் பல்லாளர் காசு 14

14. முதலாம் ஹரிஹரர் காசு 15

15. தென்காசிப் பாண்டியர் காசு 16

16. தமிழகத்தில் கிடைத்த விஜயநகரக் காசுகள் 17

17. வேணாட்டரசனின் தமிழ்க்காசு 18

18. பூதலவீர இராமவன்மரின் தமிழ்க்காசு 19

19. தமிழ் எண் காசு 20

20. கோனேரிராயன் காசு 21

21. சமணர் காசு 22
22. மதுரை நாயக்கரின் தமிழ்க்காசு 23
23. விருபாட்சி பாளைப்பட்டுக் காசு 24
24. தஞ்சை நாயக்கர் காசுகளில் கப்பல் உருவம் 25-26
25. தஞ்சை நாயக்கர் காசு 27
26. தஞ்சை ரகுநாத நாயக்கர் காசு 28
27. செஞ்சி நாயக்கர் காசு 29
28. மைசூர் உடையார் காசு 30
29. சேதுபதி மன்னரின் தமிழ்காசுகள் 31
30. சேதுபதி காசுகள் 32
31. தஞ்சை மராட்டியர் காசு 33
32. ஆரணி மராட்டியர் காசு 34
33. தஞ்சை மராட்டியரின் தமிழ் காசுகள் 35-36
34. கடவுள் பெயரில் தமிழ் காசுகள் 37
35. திருநெல்வேலி காசு 38
36. ஆர்க்காடு நவாபின் தங்கக் காசு 39
37. ஆர்க்காடு மன்னர் வெளியிட்ட அனுமன் காசு 40
38. ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் செப்புக் காசு 41
39. இந்தோ-டச்சு செப்புக் காசு 42
40. இந்தோ-டச்சு வெள்ளிக் காசு 43-44

# முன்னுரை

பழைய காசுகள் ஒரு நாட்டின் வரலாறு, பண்பாடு, நாகரிகம் போன்ற தன்மைகளைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாக விளங்குகின்றன. நான் 1980-ஆம் ஆண்டிலிருந்து பண்டைய தமிழகக் காசுகளைச் சேகரிக்கத் தொடங்கினேன். சேகரித்ததின் விளைவாக 1989-ஆம் ஆண்டிலிருந்து காசுகளைப் பற்றிய கட்டுரைகளைத் தினமணி நாளேட்டிலும், ஆவணம், வரலாறு, Coinex போன்ற இதழ்களிலும் வரிசையாக வெளியிட்டேன். அவை இந்நூலில் சிற்சில மாறுதல்களுடனும், தெளிவான ஒளிப்படங்களுடனும் மீண்டும் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலங்களில் தமிழகத்தில் கிடைத்த அரிய காசுகளைக் கொண்டு தமிழக வரலாற்றை எழுத வரலாற்று அறிஞர்களுக்குப் பயன்படும் வகையில் இந்தச் சிறிய கட்டுரை நூலை வெளியிடுகின்றேன். இந்நூலில் கூறப்பட்டுள்ள பெரும்பான்மையான காசுகள் என் களப்பணியில் சேகரிக்கப் பட்டவையே. மேலும் இந்நூல் எழுதும்போது அவ்வப்போது எனக்கு எழுந்த ஐயங்களைத் தீர்த்து, ஊக்கமளித்த தொல்லெழுத்து அறிஞரும், என் ஆசானுமாகிய **திரு.ஐராவதம் மகாதேவன்** அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிரமம் பாராமல் ஒளிப்படங்கள் எடுத்துக் கொடுத்தும், அவ்வப்போது அறிவுரை வழங்கி ஊக்கமளித்த **முனைவர் வெ.வேதாசலம்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் வெளிவரத்துணைபுரிந்த என் தந்தையார் அமரர் அளக்குடி ஆறுமுகம் மற்றும் பரமு.புஸ்பரட்டிணம், ரா.லட்சுமி, அ.அனந்தகிருஷ்ணன், அ.அகிலாண்டேஸ்வரி, சங்கரன்ராமன், ஷீலாஇராமன், கயல்விழிசீதாராமன், ஜெயந்திநாராயணசாமி ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் சென்னைக்குச் சென்றிருந்த பொழுதெல்லாம் என் தாய் போன்று எனக்கு உவந்து உணவளித்து அன்புடன் உபசரித்த காலஞ்சென்ற திருமதி.கௌரிமகாதேவன் அவர்களை இந்நூல் வெளிவரும் நேரத்தில் நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன். நூலை அழகாகவும், விரைவாகவும் அச்சிட்டளித்த வி.எஸ்.ராஜா, விஜய் ஆப்செட் அச்சகத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*தஞ்சாவூர்,*

*20-3-2002.* ஆ.சீதாராமன்.

# 1. தஞ்சையில் கிடைத்த முத்திரைக்காசு

காசின் முன்பக்கத்தில் வலது பக்கத்தின் மேலே சூரியன், சூரியனுக்குக் கீழே இரண்டு கொம்புகளையுடைய காளை, இடது பக்கத்தின் மேலே யானை உள்ளது. யானையின் கீழே தெளிவற்றச் சின்னம் காணப்படுகிறது. காசில் உள்ள நான்கு சின்னங்களும் முத்திரை முறையில் பொறிக்கப்பட்டுள்ளன. பின் பக்கத்தில் காசின் மேல்பக்கத்தில் ஒரே ஒரு காளைச் சின்னம் மட்டும் முத்திரை முறையில் உள்ளது. கிடைத்த இடம் : வெண்ணாற்றங்கரை (தஞ்சாவூர்), உலோகம் : வெள்ளி, செம்பு கலந்தது, எடை : 1.5 கிராம்.





இந்தக் காசு கலப்பு உலோகத்தால் செய்யப் பட்டுள்ளதுடன், உள்ளூர் முத்திரைக் காசுகளில் (local issues) யானை, காளைச் சின்னங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்குவதைச் சான்றாக எடுத்துக் கொண்டு இக்காசும் உள்ளூர் முத்திரைக் காசாகவே இருக்கலாம் என்பது என்னுடைய கருத்தாகும். இந்தக் காசு மௌரியர் காலத்தில் சுமாராக கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் வெளியிட்டதாகக் கருதலாம். தஞ்சையில் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே வணிகத்திற்கு இக்காசு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிய இக்காசு மிகவும் பயன் உள்ளதாக அமைந்துள்ளது. தஞ்சையில் முதன் முதலாக இப்பொழுதுதான் முத்திரைக்காசு கிடைத்துள்ளது.

# 2. சங்ககாலச் சேரர் காசுகள்

காசு-1

சங்ககாலச் சேரரின் தலைநகரான கரூரில், சதுர வடிவிலான செப்புக் காசு ஒன்று கிடைத்தது. இக்காசின் முன்பக்கத்தில் உள்ள சின்னங்கள் மூன்று வளை முகடு, கட்டாரி, கலப்பை, மலர்ச்சின்னம், வேலியிட்ட மரம், ஆண் யானை, இரண்டு மீன்கள், ஒரு பாம்பு முதலியன. பின்பக்கம் சேரர்களின் இலச்சினையான வில், அம்பு, எருதுத்தலை சின்னம் (டாரின்) அதன் கீழே அங்குசம் காணப்படுகிறது. இந்தக் காசு கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் புழக்கத்தில் இருந்திருக்கலாம். இந்தக் காசில் உள்ள சின்னங்கள் பெரும்பாலும் அக்கால மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கை, அவர்கள் வழிபட்ட தெய்வங்கள் போன்ற பலவகையான செய்திகளை வெளிப்படுத்துகின்றன.*



காசு-2

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் யானை, யானையின் மேலே மங்கலச் சின்னங்களும், பின்பக்கத்தில் வில், அம்பும், அதன் கீழே அங்குசம் காணப்படுகின்றன.** யானையின் மேல் தமிழ்-பிராமி எழுத்துக்களைப் போல் உள்ளனவெல்லாம் மங்கலச் சின்னங்களே. இதில் டாரின் சின்னம் மிகத் தெளிவாகத் தெரிகின்றது. இந்தக் காசு சுமாராக கி.மு.முதலாம் நூற்றாண்டில் வெளியிட்டிருக்கலாம். கிடைத்த இடம் : கரூர், உலோகம் : செப்பு.



* ஆறுமுகசீதாராமன் : 'சங்ககாலச் சேரர் காசு' தினமணி, 9-7-1990.

** ஆறுமுகசீதாராமன் : '2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சேரர் காசு', தினமணி, 1-3-1990.

**காசு-3**

காசின் முன்பக்கத்தில் இந்திரதுவஜம் (Triangle stand) உள்ளது. பின்பக்கத்தில் வில், அம்பு உள்ளன. தென் இந்தியாவில் வெளியிடப்பட்ட சங்ககாலக் காசுகளில் இந்திரதுவஜம் மிக முக்கியச் சின்னமாகக் காணப்படுகின்றது. இந்தக் காசு சுமாராக கி.மு. முதலாம் நூற்றாண்டில் வெளியிட்டதாகக் கருதலாம். கிடைத்த இடம் : கரூர், உலோகம் : செப்பு, காசின் எடை : **850** மி. கிராம்.



**காசு-4**

காசின் முன்பக்கத்தில் மேலே ஒரு சதுரத் தொட்டி ஒன்று உள்ளது. தொட்டியின்கீழ் படுக்கை வாட்டில் மீன் உள்ளது. பின்பக்கத்தில் வில், அம்பு, அங்குசம் உள்ளன. காசில் உள்ள மீன் சின்னம் சேரமன்னர்கள் பாண்டியரோடு கொண்ட வெற்றிக்காகவோ அல்லது நட்புறவுக்காகவோ இந்தக் காசை நாட்டில் புழக்கத்தில் வெளியிட்டிருக்கலாம். இதனைச் சுமாராக கி.மு.முதலாம் நூற்றாண்டில் வெளியிட்டதாகக் கருதலாம். கிடைத்த இடம் : மதுரை, உலோகம் : செப்பு, எடை : 1.2 கிராம்.



# 3. சங்ககாலச் சோழர் காசு

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் ஆண்யானை, யானையின் மேல் குடை உள்ளது. பின்பக்கத்தில் இடது பக்கம் நோக்கி நின்ற நிலையில் முன் காலைத் தூக்கியபடியும், வாலைச் சுருட்டிக் கொண்டும் புலி ஒன்று உள்ளது. இதனைச் சுமாராக கி.மு. முதலாம் நூற்றாண்டில் வெளியிட்டதாகக் கருதலாம். கிடைத்த இடம் : அரியலூர், **உலோகம் : செப்பு, காசின் எடை : 2.550 கிராம்.**





*சங்ககாலச் சோழர் காசுகள் காவிரிப்பூம்பட்டிணம், கரூர். திருக்கோவிலூர் போன்ற இடங்களில் பலவகைக் காசுகள் கிடைத்துள்ளன. ஆனால் அரியலூரில் இப்பொழுதுதான் முதன்முதலாக சங்ககாலச் சோழர்காசு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.*

---

*ஆறுமுகசீதாராமன் : 'சங்ககாலக் காசுகள்', பக். 130.*
*ஆவணம், இதழ்-8, (ஜூலை, 1997),*
*தமிழகத் தொல்லியல் கழகம்.*

# 4. சங்ககாலப் பாண்டியர் காசு

காசின் முன்பக்கத்தில் குதிரை ஒன்று இடது பக்கம் நோக்கி நின்ற நிலையிலும், குதிரையின் முன் ஒரு தொட்டிக்குள் இரண்டு ஆமைகளும் உள்ளன. குதிரையின் முதுகுப் பக்கத்தின்மேல் டாரின் (எருதுத்தலை) சின்னம் மூன்று உள்ளது. எழுத்துகள் இடமிருந்து வலமாக **'பெருவாழுதி'** என்று தமிழ்-பிராமி எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இதனை பெருவழுதி என்று படிக்கலாம். 'தி' என்ற எழுத்தின் பாதி விளிம்பிற்கு வெளியே சென்றுள்ளது. 'வா' என்ற எழுத்தின் கீழே ஆமை ஒன்று உள்ளது. பின்பக்கத்தில் மீன் கோட்டு உருவம் (குறியீடு) காணப்படுகிறது. கிடைத்த இடம் : திருநெல்வேலி (தாமிரபரணி ஆறு), உலோகம் : செப்பு, காசின் எடை : **5.5** கிராம்.



காசில் உள்ள எழுத்தமைதியைக் கொண்டு இதனை கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகக் கொள்ளலாம். இந்தக் காசைப்பற்றி முதன்முதலில் திரு.இரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 'பாண்டியர் பெருவழுதி நாணயங்கள்' என்ற நூலில் விரிவாகக் கூறியுள்ளார். அவர் பெருவழுதி நாணயங்கள் மதுரையில் நாணய சேகரிப்பாளரிடம் கிடைத்ததாகக் கூறியுள்ளார். ஆனால் எனக்கு கிடைத்த காசு தாமிரபரணி ஆற்றுப் படுகையில் கிடைத்துள்ளதால் பெருவழுதி மன்னரின் ஆட்சிப்பரப்பு, வாணிகம், திருநெல்வேலி வரை இருந்துள்ளதை அறியமுடிகிறது.

# 5. சங்ககால மலையமான் காசு

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் குதிரை, குதிரையின் தலைக்கு முன் அங்குசம் ஒன்றும், குதிரையின் முதுகின் மேல் பிறை ஒன்றும் உள்ளன. காசின் பின்பக்கத்தில் ஆற்றைக் குறிக்கும் கோடுகள் மற்றும் மலை முகடு உள்ளன. கிடைத்த இடம் : திருக்கோவிலூர், உலோகம் : செப்பு, காசின் எடை : *3.4* கிராம்.



திருக்கோவிலூரில் கிடைத்த மலையமான் காசுகள் எல்லாம் சதுர வடிவிலேயே கிடைத்துள்ளன. ஆனால் இக்காசு நீள்வட்ட வடிவில் கிடைத்துள்ளது மிக அரிதானதாகும். இக்காசு மலையமானால் சிறப்பு வெளியீடாக இறுதிக் காலத்தில் சுமாராக கி.மு.முதலாம் நூற்றாண்டில் புழக்கத்தில் வெளியிட்டதாகக் கருதலாம்.

---

ஆறுமுகசீதாராமன் : 'சங்ககாலக் காசுகள்'
பக். 133, ஆவணம், இதழ் 8, (ஜுலை 1997),
தமிழகத் தொல்லியல் கழகம்.

# 6. சங்ககால அதியமான் காசு?

காசின் முன்பக்கத்தில் இடதுபக்கம் நோக்கி நிற்கும் குதிரை, குதிரையின்மேல் ஸ்ரீவத்சம், பக்கத்தில் ஆற்றின் கரை (கோடிட்டு) காட்டப்பட்டுள்ளன. குதிரையின் வாய் பக்கத்தின்மேல் சக்கரம் உள்ளது. குதிரையின் காலின் முன் அங்குசம் உள்ளது. பின்பக்கத்தில் மூன்று கோடுகள் செங்குத்தாகத் தனித்தனியாக உள்ளன. கிடைத்த இடம்: தருமபுரி, உலோகம்: செப்பு, எடை: 2 கிராம்.





சங்ககால அதியமான் ஆட்சி நிலைபெற்ற தருமபுரியில் கிடைத்துள்ளதால் இந்தக்காசு சங்ககால அதியமானால் வெளியிடப்பட்டிருக்கலாம். மலையமான் காசுகளில் காணப்படும் குதிரையைப் போன்று இல்லாமல் வேறுபடுத்தி காண்பிப்பதற்காக குதிரையின் கழுத்தை நீட்டியிருக்கிறார்கள். முன் பக்கத்தில் ஆற்றின் கரையைக் குறிக்கும் கோடுகளும் இந்தக் காசில் உள்ளது. மலையமான் காசுகளை கிடைத்த இடத்தை வைத்து மலையமான் காசுகள் என்று சொல்வதைப் போல் இந்தக் காசினையும் கிடைத்த இடத்தை வைத்துதான் அதியமான் காசு என்று கூறலாம். சங்ககாலக் குறுநில மன்னர்களான அதியமான், மலையமான் போன்றோரின் காசுகள் இன்று வரை எழுத்துகளோடு பெயரோடு கிடைக்கவில்லை. இந்தக் காசு கி.மு. முதலாம் நூற்றாண்டில் வெளியிட்டிருக்கலாம்.

---

ஆறுமுக சீதாராமன்: *'சங்ககால அதியமான் காசுகள்' பக்-9,* Coinex-95, Madras Coin Society.

# 7. விஷ்ணுகுண்டர் காசு

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் சிங்கம் உள்ளது. பின்பக்கத்தில் இடதுபுறம் சங்கும், வலதுபுறம் சக்கரமும், நடுவில் ஒரு குத்துவாளும் உள்ளன. கிடைத்த இடம்: திருக்கோவிலூர், உலோகம்: கலப்பு உலோகம், எடை: *1.150* கிராம்.



கோதாவரிக்கு வடபாற்பட்ட பகுதியை, வாகாடகர் பெண்ணை மணந்த தலைவன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் மரபினர் விஷ்ணுகுண்டர் எனப்பட்டனர். அவர்களது ஆட்சிக்காலம் கி.பி.450-550 எனலாம். பல்லவர்களுக்கு முன் விஷ்ணுகுண்டர்களின் ஆட்சி திருக்கோவிலூர் வரை இருந்திருக்கலாம் அல்லது வணிகத்திற்காக இந்தக் காசை திருக்கோவிலூரில் புழக்கத்தில் வெளியிட்டிருக்கலாம். விஷ்ணுகுண்டர் வெளியிட்ட காசுகளையும், பல்லவர்கள் வெளியிட்ட காசுகளையும் சேர்த்து ஆய்வு செய்வோமானால் உலோகம் ஒன்றாகவே இருக்கும். விஷ்ணுகுண்டர்களை பின்பற்றியே பல்லவர்கள் காசுகளை வெளியிட்டுள்ளனர்.

---

ஆறுமுக சீதாராமன்: 'விஷ்ணுகுண்டர் காசு' பக்-11,
Coinex-95, Madras Coin Society.

# 8. பல்லவர் காசு

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் காளை உள்ளது. பின்பக்கத்தில் ஒரு சிவலிங்கம் உள்ளது. கிடைத்த இடம்: திருக்கோவிலூர், உலோகம்: கலப்பு உலோகம், எடை: 2.15 கிராம்.

முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி.580-630) இந்தக் காசை வெளியிட்டிருக்கலாம். அவன் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்குச் சென்றபோது சிவலிங்கத்தைக் காசில் பொறித்து சிறப்பு வெளியீடாக வெளியிட்டிருக்கலாம்.



காசக்குடி, கூரம் செப்பேடுகளில் காளையின் உருவமும், லிங்க உருவமும் காணப்படுகின்றன. செப்பேடுகளில் உள்ள உருவங்களையும், காசில் உள்ள உருவங்களையும் இங்கு ஒப்பிட்டுப்பார்க்கலாம். நந்தி(காளை) இலச்சினை பொறித்த காசு பொதுவாகப் பல்லவர்கள் சைவசமயச் சார்பு உடையவர் என்பதை நன்கு எடுத்துக்காட்டுகிறது.

---

ஆறுமுக சீதாராமன்: 'தமிழகக் காசுகள்'
(அண்மைக் காலக் கண்டுபிடிப்புகள்)
தொல்லியல் நோக்கில் தமிழகம், பக்-60,
தொல்பொருள் ஆய்வுத்துறை 1999.

# 9. சீனர் காசு

சீன எழுத்துகள் பொறிக்கப்பட்ட ஒரு செப்புக் காசு நாகை மாவட்டம், மயிலாடுதுறை அருகிலுள்ள தேரழுந்தூரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. காசின் எடை: 9.6 கிராம். இந்த காசில் உள்ள சீன எழுத்துகளைப் படித்துக் கூறவும், காசின் காலத்தை அறியவும், பல வரலாற்று அறிஞர்களின் (தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக தொல்லெழுத்தியல் துறையின் பேராசிரியர் எ. சுப்பராயலு, தினமணி ஆசிரியர் ஐராவதம் மகாதேவன், டோக்கியோ பல்கலைக் கழகத்தின் தெற்காசிய வரலாற்றுத் துறைப் பேராசிரியர் நோபோரு கராஷிமா) உதவி கோரப்பட்டது. டோக்கியோ பல்கலைக் கழகத்தில் சீன வரலாற்றுக்கான இணைப்பேராசிரியை திருமதி. மியோ கிஷிமோடோ, இந்த காசைப்பற்றி அளித்த தகவல்கள் கீழ் வருமாறு.



இந்தக் காசு **'ஹீய்சாங்'** என்ற சீனப்பேரரசரின் காலத்தில் (கி.பி.1102-06) வெளியிடப்பட்டதாகும். ஹீய்சாங் வட சீனத்தின் ஸோங் அரச வம்சத்தைச் . சேர்ந்தவர். இந்தக் காசில் எழுதப்பட்ட வாசகங்கள் அது எழுதப்பட்ட சிறப்பான விதத்துக்காக மிகவும் புகழ்பெற்று விளங்குவதாகும். இந்த காசில் உள்ள எழுத்துகளைப் பேரரசரே தனது கைப்பட எழுதியதாகக் கர்ணப்பரம்பரைக் கதை ஒன்று உண்டு. சீனத்தில் இத்தகைய எழுத்துக்கலைப் பள்ளி ஒன்றை தோற்றுவித்தவர் என்ற பெருமையும் இந்தப் பேரரசருக்கு உண்டு. கி.பி.11-12-ஆம் நூற்றாண்டுகளில் சோழப் பேரரசுக்கும், சீன் நாட்டுக்கும் இடையே வர்த்தகம் நடைபெற்ற காலத்தில் இந்தக் காசு சோழ மண்டலத்திற்கு வந்திருக்க வேண்டும்.

# 10. வேணாட்டரசனின் வெள்ளிக்காசு

வேணாட்டரசன் உதய மார்த்தாண்டவர்மன் காலத்தில் (கி.பி.1175-1195) வெளியிட்ட ஒரு அரிய வெள்ளிக்காசு ஒன்று திருவனந்தபுரத்தில் கிடைத்துள்ளது. காசின் முன்பக்கத்தில் இரண்டு வரிகளில் நாகரி எழுத்தில் **'ஸ்ரீ உதய மார்த்தாண்டஸ'** என்று பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டு வரிகளின் நடுவே எட்டுக்கால் சிலந்தி பூச்சி உள்ளது. பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் நாகரி எழுத்தில் **'ஸ்ரீ உதய மார்த்தாண்டஸ'** என்று உள்ளது. எழுத்துகளின் நடுவே முதலை ஒன்று உள்ளது. காசின் எடை: ***2.370*** கிராம்.





வேணாட்டில் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் நாகரி எழுத்தையே பயன்படுத்தி உள்ளனர் என்பதையும், அதே காலக்கட்டத்தில் ஆட்சிபுரிந்த இலங்கை மன்னர்கள், சோழ மன்னர்கள் நாகரி எழுத்தையே பயன்படுத்தி உள்ளனர் என்பதையும் இங்கு ஒப்பிட்டுப்பார்க்கலாம்.

---

ஆறுமுக சீதாராமன் & எம். இராமநாதரெட்டியார் } 'வேணாட்டரசனின் வெள்ளிக்காசு' பக்-10, Coinex-1998, Madras Coin Society.

# 11. பிற்காலச் சோழரின் தமிழ்க்காசு

காசின் முன்பக்கத்தில் வலது பக்கம் நோக்கி அமர்ந்திருக்கும் புலி, அதன் இருபக்கங்களில் குத்து விளக்குகள் உள்ளன. பின்பக்கத்தில் **'செதிகுல'** என்று கி.பி.12-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் எழுதப்பட்டுள்ளது. காசு கிடைத்த இடம்: தஞ்சாவூர், உலோகம்: தங்கம், காசின் எடை: 100 மில்லி கிராம்,

பிற்காலச் சோழர் காசுகளில் கிரந்தம், நாகரி மட்டுமே பொறிக்கப்பட்டிருக்கும். ஆனால் இந்தக்காசில் நான்கு எழுத்துகளுமே தமிழில் உள்ளது சிறப்பானதாகும்.





மூன்றாம் குலோத்துங்க சோழனது (கி.பி.1178-1218) ஆட்சிக் காலத்தில் சேதி நாட்டிலிருந்து அரசாண்ட சிற்றரசர்கள் சோழ அரசச் சின்னத்தைப் பொறித்து இந்தக் காசை சோழ நாட்டில் வெளியிட்டிருக்கலாம்.

விக்கிரவண்டி புவனேஸ்வரர்க் கோயில் கல்வெட்டு கூறுகின்ற சேதிகுல சிந்தாமணீஸ்வரம் என்னும் கோயிலும் சேதியர் அமைத்ததாகும். மருத்துவக்குடி ஐராவதேஸ்வரர்க் கோயில் கல்வெட்டு ஒன்றில் செதிகுல மாணிக்கப் பெரும்பள்ளி குறிக்கப்பெறுகிறது. அதனால் 'செதிகுல' என்று பொறிக்கபட்ட காசும் சோழர்கள் ஆட்சியின் கீழ் இருந்த சேதிராயர்களால் வெளியிடப்பட்டதாகக் கருதலாம்.

---

ஆறுமுகசீதாராமன்: தமிழகக் காசுகள்,
(அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்)
தொல்லியல் நோக்கில் தமிழகம், பக்-61,
தொல்பொருள் ஆய்வுத் துறை 1999.

# 12. பிற்காலப் பாண்டியர் காசு

காசின் முன்பக்கத்தில் இடது பக்கம் நோக்கி நிற்கும் யானை உள்ளது. பின்பக்கத்தில் **'சுந்தரபாண்டியன்'** என கி.பி.13-ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துகளில் எழுதப்பட்டு உள்ளது. எழுத்துகளின் கீழே இரண்டு மீன்களின் நடுவே செண்டு ஒன்று உள்ளது. காசு கிடைத்த இடம்: மதுரை, உலோகம்: செப்பு, காசின் எடை: **1.5** கிராம்.



இந்தக்காசு இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனால் (கி.பி.1238-1255) வெளியிட்டதாகக் கருதலாம். தமிழகத்தில் போசளர்கள் வெளியிட்ட காசுகளில் யானை, அங்குசம் உள்ளன. ஆனால் இக்காசில் உள்ள யானையைப் போசளர்களின் இலச்சினையாகக் கருதலாம். கி.பி. 1234-ல் வீரசோமேஸ்வரன் பாண்டிய நாட்டை ஆக்கிரமித்து தனது ஆதிக்கத்தில் வைத்திருந்தான். பிறகு பாண்டியர்களுக்கும், போசளர்களுக்கும் இடையே நட்புறவு துவங்கியது. போசளர்களின் மேலாதிக்கத்தைப் பாண்டியர் ஏற்றனர். அந்தக் காலக் கட்டத்தில்தான் இந்தக் காசை பாண்டிய மன்னர் வெளியிட்டிருக்க வேண்டும்.

---

ஆறுமுகசீதாராமன்: 'தமிழகக் காசுகள்' -
அண்மைக் காலக் கண்டுபிடிப்புகள், பக்-117,
ஆவணம், இதழ்-12, (ஜுலை-2001),
தமிழகத் தொல்லியல் கழகம்.

# 13. மூன்றாம் பல்லாளர் காசு

கோயமுத்தூர் மாவட்டம், பேரூர் நொய்யல் ஆற்றுப் படுகையில் இரண்டு செப்புக் காசுகள் கிடைத்தன. இந்தக் காசுகள் மூன்றாம் பல்லாளர் காலத்தில் வெளியிடப் பட்டவையாகும். காசின் முன்பக்கத்தில் நிற்கும் மனித உருவத்தின் தலைப்பகுதியில் **'ப'** என்ற கன்னட-தெலுங்கு எழுத்து உள்ளது. பல்லாளர் என்ற பெயரில் உள்ள முதல் எழுத்தான 'ப' மட்டும் காசில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் வலப்புறம் நோக்கி நிற்கும் ஆண் யானை உள்ளது. காசின் எடை: *3.6* கிராம்.



தமிழகத்தில் கிடைத்துள்ள பிற்காலச் சோழர், பாண்டியர், சேரர், மதுரை நாயக்கர், தஞ்சை நாயக்கர் காசுகளில் கூட இதுபோன்ற நிற்கும் மனித உருவம் உள்ளது. இந்தக் காசுகளைப் பின்பற்றி ஹொய்சள மன்னர் மூன்றாம் பல்லாளர் தமிழ்நாட்டில் மட்டும் புழக்கத்தில் இருக்கவேண்டும் என்று கருதி தமிழ் நாட்டுக் காசுகளைப் போலவே இக்காசுகளை வெளியிட்டுள்ளார். எழுத்துப் பொறிப்பு இல்லாத ஹொய்சளரின் பல காசுகள் தமிழகத்தில் கிடைத்து உள்ளன. அந்தக் காசுகளில் யானை அல்லது அங்குசம் இலச்சினையாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இப்போது கிடைத்துள்ள இந்தக்காசு மூன்றாம் பல்லாளர் தமிழகத்தை குறிப்பாகக் கொங்கு நாட்டை ஆட்சி செய்தபோது (கி.பி.*1292-1345*) வெளியிட்டதாகக் கருதலாம்.

ஆறுமுக சீதாராமன்: 'தென்னிந்தியக் காசுகள்' புதிய கண்டு பிடிப்புகள், பக்-*89*, வரலாறு, இதழ்-*6*, ஆகஸ்டு-*1996*, டாக்டர் இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்.

# 14. முதலாம் ஹரிஹரர் காசு

முதலாம் ஹரிஹரர் காலத்தில் (கி.பி.1336-1356) வெளியிடப்பட்ட செப்புக்காசு ஒன்று பெரியார் மாவட்டம் பவானி ஆற்றுப்படுகையில் கிடைத்துள்ளது. காசின் முன் பக்கத்தில் வலப்புறம் நோக்கிய கருடன், பறக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. கருடனின் வலப்புறத்தில் பிறையும், இடப்புறத்தில் சூரியனும் காணப்படுகின்றன. கருடனின் முகத்திற்கு வலப்பக்கத்தில் சக்கரம் ஒன்று காணப்படுகிறது. இடப்பக்கத்தில் சங்கு, தேய்ந்த நிலையில் உள்ளது. பின்பக்கத்தில் நந்திநாகரி எழுத்தில் **'ஹரிஹர'** என்று இரண்டு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. காசின் எடை: 4 கிராம்.





முதலாம் ஹரிஹரரால் வெளியிடப்பட்ட முதல் வகை காசுகளில் கன்னடம் பொறிக்கப்பட்டு பிறகு நந்திநாகரி எழுத்துகளை மற்ற காசுகளில் பொறித்து வெளியிட்டுள்ளனர். முதலாம் ஹரிஹரரால் இந்தக் காசு தமிழகப் பகுதியில் புழக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கலாம்.

---

ஆறுமுக சீதாராமன்: 'தென்னிந்தியக் காசுகள்' (புதிய கண்டு பிடிப்புகள்) பக்-90, வரலாறு, இதழ்-6, பிப்ரவரி-1996, டாக்டர் இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்.

# 15. தென்காசிப் பாண்டியர் காசு

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் மனித உருவமும், இடது பக்கத்தில் குத்து விளக்கு ஒன்றும் உள்ளன. பின்பக்கத்தில் மனிதனின் அமர்ந்த உருவமும், இடது கையின் கீழ் '**ஸ்ரீ பராக்ரம**' என்று கி.பி.15-ஆம் நூற்றாண்டு நந்திநாகரி எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளது. கிடைத்த இடம்: திருநெல்வேலி, உலோகம்: செப்பு, காசின் எடை: ***3.4*** கிராம்.



இந்தக் காசை தென்காசிப் பராக்கிரம பாண்டியன் (கி.பி.*1422-1463*) வெளியிட்டதாகக் கருதலாம். தென்காசி பாண்டியர்கள் வெளியிட்ட ஆகவராமன் காசிலும் பாண்டியர் இலச்சினை இல்லை. அதேபோல் இந்தக் காசிலும் பாண்டியர் இலச்சினை இல்லாதது சிறப்பம்சமாகும்.

---

ஆறுமுக சீதாராமன்: 'தமிழகக்காசுகள்'
அண்மைக் காலக் கண்டுபிடிப்புகள், பக்-117,
ஆவணம், இதழ்-12 (ஜூலை 2001),
தமிழகத் தொல்லியல் கழகம்.

# 16. தமிழகத்தில் கிடைத்த விஜயநகரக் காசுகள்

***காசு-1***

*காசின் முன்பக்கத்தில் இரண்டு யானைகள் துதிக்கைகளுடன் மேலே ஒன்று சேர்ந்துக் கொண்டு நின்ற நிலையில் உள்ளன. வலது பக்கம், இடது பக்கம், நடுவில் சக்கரம், சங்கு, நாமம் உள்ளன. பின்பக்கத்தில் தெலுங்கு-கன்னட எழுத்துகளில் '**பிரதாபதேவராய**' என்று பொறிக்கப் பட்டுள்ளது. எடை: **3.2** கிராம், உலோகம்: செப்பு, கிடைத்த இடம்: தஞ்சாவூர், இந்தக் காசு இரண்டாம் தேவராயரால் **(கி.பி.1423-1446)** தமிழகத்தில் வெளியிடப்பட்டதாகக் கருதலாம்.*



***காசு-2***

*காசின் முன்பக்கத்தில் புள்ளிகளால் ஆன வட்டத்திற்குள் யானையும், காளையும் உள்ளன. ஒரே தலையில் காளை முகமும், யானை முகமும் காட்டப்பட்டுள்ளன. பின்பக்கத்தில் வட்டத்திற்குள் நடுவில் குத்துவாள் ஒன்று உள்ளது. இரு புறங்களிலும் சூரியன், சந்திரன் உள்ளன. இடது பக்கத்திலிருந்து, வலது பக்கமாக தேவநாகரி எழுத்தில் மூன்று வரிகளில் '**ஸ்ரீ பிரதாபதேவராய**' என்று பொறிக்கப் பட்டுள்ளது. எடை: **2.3** கிராம், உலோகம்: செப்பு, கிடைத்த இடம்: கரூர். இந்தக் காசு இரண்டாம் தேவராயரால் **(கி.பி.1423-1446)** தமிழகத்தில் வெளியிட்டதாகக் கருதலாம்.*



# 17. வேணாட்டரசனின் தமிழ்க் காசு

வேணாட்டரசன் பூதலவீர உதய மார்த்தாண்டவர்மன் காலத்தில் (கி.பி.1477-1531) வெளியிட்ட ஒரு அரிய செப்புக் காசு ஒன்று அம்பாசமுத்திரம், தாமிரபரணி ஆற்றில் கிடைத்துள்ளது. காசின் முன்பக்கத்தில் மனிதன் அமர்ந்த நிலையிலும், இடதுகையின் கீழே பரசு கட்டாரி ஒன்றும் உள்ளது. பின்பக்கத்தில் **'இராமயிராசா'** என்று நான்கு வரிகளில் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. காசில் உள்ள எழுத்தமைதி கி.பி.16-ஆம் நூற்றாண்டினதாகவே காணப்படுகிறது. காசின் எடை: 2.8 கிராம்.



அம்பை வட்டம், பத்தமடை அருகிலுள்ள கரிசூழ்ந்த மங்கலம் கோவில் கல்வெட்டுகள் பூதல வீர மன்னனை ராமராசா எனக் குறிப்பிடுகின்றன. அதனால் இந்தக் காசை வெளியிட்ட மன்னன் வேணாட்டைச் சேர்ந்த பூதல வீர உதய மார்த்தாண்ட வர்மன் என்பது குறிப்பிடத்தக்கது.

---

டி. சங்கர நாராயணன் & ஆறுமுக சீதாராமன் — 'வேணாட்டரசனின் தமிழ்க்காசு', பக்-24, Coinex-1998, Madras Coin Society.

# 18. பூதலவீர இராமவன்மரின் தமிழ்க்காசு

காசின் முன்பக்கத்தில் வலது பக்கம் இரண்டு மீன்கள் செங்குத்தாக உள்ளது. இடது பக்கம் தெளிவில்லாத உருவம் உள்ளது. பின்பக்கத்தில் '**பூதல**' என்று தமிழ் எழுத்துகளில் ஒரே வரியில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தக் காசு வேணாட்டைச் சேர்ந்த சேரமன்னன் பூதலவீர இராமவன்மரால் (கி.பி.1541-1547) வெளியிடப்பட்டதாகக் கருதலாம்.



காசின் எழுத்தமைதி கி.பி.16-ஆம் நூற்றாண்டினதாகவே உள்ளது. உலோகம்: செப்பு, இந்தக் காசை ஆய்வுக்குக் கொடுத்து உதவிய போளுவாம்பட்டி ஐ.இராமசாமி அவர்களுக்கு நன்றிக் கடப்பாடுடையவன் ஆவேன். பூதல வீர இராமவன்மர் பாண்டியரை போரில் வெற்றிபெற்ற காரணத்தினால் பாண்டியருடைய இலச்சினையை (இரண்டு மீன்கள்) காசில் பொறித்து சிறப்பு வெளியீடாக புழக்கத்தில் வெளியிட்டிருக்கலாம்.

# 19. தமிழ் எண் காசு

தமிழ் எண்கள் பொறிக்கப்பட்ட காசின் முன்பக்கத்தில் மனிதன் நிற்கும் உருவமும், வலதுபக்கத்தில் ஒரு குத்துவிளக்கும் காணப்படுகின்றன. பின்பக்கத்தில் விளிம்பின் மேலே சூரியன், சந்திரன் கீழே **சயஉ** (42) என்று தமிழ் எண்கள் (சுமார் கி.பி.16-ஆம் நூற்றாண்டுத் தமிழ் எண்கள்) பொறிக்கப்பட்டுள்ளன. கிடைத்த இடம்: திருநெல்வேலி, உலோகம்: செப்பு, எடை: *3.350* கிராம்,





இதுவரை கிடைத்துள்ள தமிழ் எண் காசுகளில் எண்களோடு மன்னர் பெயரும் காணப்படும். ஆனால் இக் காசில் மன்னன் பெயரோ, இலச்சினையோ காணப்பட-வில்லை. இந்தக் காசை பிற்காலச் சேர மன்னர்கள் (வேணாடு) வெளியிட்டதாகக் கருதலாம்.

---


ஆறுமுகசீதாராமன்: 'தமிழகக் காசுகள்'
அண்மைக் காலக் கண்டுபிடிப்புகள், பக்-117,
ஆவணம், இதழ்-12, (ஜூலை-2001),
தமிழகத் தொல்லியல் கழகம்.

# 20. கோனேரிராயன் காசு

காசின் முன்பக்கத்தில் இடது பக்கம் நோக்கி நிற்கும் காளையின் முன் குத்துவாளும், மேலே பிறை, குடை, பூவிதழ் காணப்படுகின்றன. பின்பக்கத்தில் மூன்று வரிகளில் **'கோனெரிராயன்'** என்று தமிழில் பெரிதாகப் பொறிக்கப் பட்டுள்ளது. கிடைத்த இடம்: பாபநாசம், உலோகம்: செப்பு, காசின் எடை: *3.1.* கிராம்.



கி.பி. **1486** முதல் கி.பி. **1495** வரை ஒன்பது ஆண்டு காலம் சோழ மண்டலத்தில் எந்தப் பேரரசுக்கும் கட்டுப்படாத ஆட்சியாளனாக கோனேரிராயன் ஆண்டான் என்பது வரலாறு. இந்த மன்னன் வெளியிட்ட நான்கு வகை காசுகளிலும் தமிழ் எழுத்துகளையே புகுத்தியுள்ளான். கிடைத்த காசுகளின் மூலம் தமிழ் மொழிக்கு கோனேரிராயன் முக்கியத்துவம் கொடுத்துள்ளதை அறிய முடிகிறது.

---

ஆறுமுக சீதாராமன்: 'தமிழகக் காசுகள்'
அண்மைக் காலக் கண்டு பிடிப்புகள், பக்-119,
ஆவணம், இதழ்-12, (ஜுலை-2001),
தமிழகத் தொல்லியல் கழகம்.

# 21. சமணக் காசு

காசின் முன்பக்கத்தில் சாமுண்டராயன் உருவம் அமர்ந்த நிலையிலும், பின் பக்கத்தில் இரண்டு பாதங்கள் (சமணபாதம்) செங்குத்தாக உள்ளன. இந்தக்காசு சமண மதத்தை பின்பற்றிய சாமுண்டராயன் என்னும் கங்க அமைச்சரால் வெளியிடப் பட்டிருக்கலாம். கிடைத்த இடம்: வள்ளிமலை, உலோகம்: செப்பு, எடை: 3.7 கிராம்.



வைணவ மதத்தைச் சேர்ந்த மன்னர்கள் பாதத்தை (விஷ்ணுபாதம்) பொறித்து வெளியிட்டுள்ளனர். ஆனால் அவர்கள் வெளியிட்ட காசுகளில் வைணவக் கடவுளர்கள் அல்லது சங்கு, சக்கரம் காணப்படும். ஆனால் கிடைத்த காசில் சாமுண்டராயர் அமர்ந்த நிலையில் இருப்பதாலும் கிடைத்த இடம் சமணர்கள் வாழ்ந்த இடமாக இருப்பதாலும் இந்தக் காசு சமண மதத்தை பின்பற்றிய ஒருவரின் சிறப்பு வெளியீடாக வெளியிட்டிருக்கலாம். எழுத்துகள் இல்லாததால் காசின் காலத்தை உருவத்தையும், வடிவத்தையும் வைத்துக் கொண்டு சுமாராக கி.பி.11-12-ஆம் நூற்றாண்டில் வெளியிட்டதாகக் கருதலாம்.

---

ஆறுமுகசீதாராமன்: 'தமிழகக் காசுகள்' (அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்) பக்-23, Coinex-2000, Madras Coin Society.

# 22. மதுரை நாயக்கரின் தமிழ்க்காசு

காசின் முன்பக்கத்தில் பாலகிருஷ்ணன் அமர்ந்த நிலையில் உள்ளார். பின்பக்கத்தில் **'கிட்டணப நாய(க்கர்)'** என்று மூன்று வரிகளில் தமிழ் எழுத்தில் உள்ளது. இந்தக் காசு முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கரால் (கி.பி.1564-1572) வெளியிடப் பட்டதாகக் கருதலாம். கிடைத்த இடம்: கரூர், உலோகம்: செப்பு, எடை: *3.2* கிராம்.



கிருஷ்ணப்பருடைய சிறந்த அறிவு, கனிந்த இரக்கம், உயர்ந்த குணம், நேர்மை, நன்றி மறவாத்தன்மை, அறச் சிந்தனை முதலிய பண்புகள் எல்லாவற்றையும் சாசனங்கள் எடுத்துக் கூறுகின்றன. இப்படியிருந்த காரணத்தால் கிருஷ்ணப்பர் நாட்டுக்குத் தமது ஆட்சியில் மாட்சி மிக்க நன்மைகள் பல செய்யக் கூடியவராய் இருந்தார். திருநெல்வேலியைச் சார்ந்த பாளையங்கோட்டைக்கு அருகில் கிருஷ்ணாபுரம் என்னும் ஊரை அமைத்தார். திருநெல்வேலிக்கு மேற்கே கடையம் கிருஷ்ணாபுரம் என்னும் மற்றொரு ஊரையும் அமைத்தார்.

---

ஆறுமுகசீதாராமன்: 'தென்னிந்தியக் காசுகள்' புதிய கண்டுபிடிப்புகள், பக்-*122*, ஆவணம், இதழ்-*9* (ஜூலை-*1998*), தமிழகத் தொல்லியல் கழகம்.

# 23. விருபாட்சி பாளையப்பட்டுக் காசு

காசின் முன்பக்கத்தில் இடது பக்கம் நோக்கி செல்லும் அனுமன் உள்ளான். பின்பக்கத்தில் காசின் விளிம்பைச் சுற்றி **'விருபாட்சி'** என்று தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. 'பாட' என்ற இரண்டு எழுத்துகளும் கூட்டெழுத்தில் உள்ளன. உலோகம்: செப்பு, கிடைத்த இடம்: திண்டுக்கல், எடை: *1.750* கிராம்.



மதுரை நாயக்க மன்னர்களால் ஏற்படுத்தப்பட்ட *72* பாளையப்பட்டுக்களில் விருப்பாட்சி பாளையப்பட்டும் ஒன்றாகும். பாளையப்பட்டுக்காரர்களுக்கு அவர்வர்களுடைய பகுதிகளில் நீதி வழங்கும் முறையும், ஆட்சிப் பொறுப்பும் இருந்ததால், அப்பாளையப்பட்டுக்காரர்கள், சிற்றரசர்கள் போல் சிறந்து விளங்கினார்கள். பாளையப்பட்டு சிற்றரசர்களில் விருபாட்சி பாளையக்காரர் மட்டும் சுயேட்சை நிலையில் இருக்கும்போது காசுகளை வெளியிட்டு உள்ளார். வேறு எந்த பாளையப்பட்டுக்காரரும் பெயருடன் காசுகள் வெளியிட்டதாகத் தெரியவில்லை. இந்தக்காசு கி.பி.*16*-ஆம் நூற்றாண்டில் வெளியிட்டிருக்கலாம்.

# 24. தஞ்சை நாயக்கர் காசுகளில் கப்பல் உருவம்

*காசு–1*

காசின் முன்பக்கத்தில் கப்பல், கப்பலுக்குள் மனிதன் அமர்ந்த உருவம் காணப்படுகிறது. பின்பக்கத்தில் மேற்பகுதியில் காம்பில் இலைகள் காணப்படுகின்றன. கீழே '**ராம**' என்று நாகரி எழுத்து உள்ளது. ராமராய என்ற பெயரின் சுருக்கமாக 'ராம' என்று பொறித்துள்ளனர். கிடைத்த இடம்: கும்பகோணம். உலோகம்: செப்பு, காசின் எடை: **2** கிராம்.



தஞ்சை நாயக்க மன்னன் இரகுநாதன் விஜயநகர மன்னன் இரண்டாம் ராமராயனுக்கு கும்பகோணத்தில் முடிசூடியதன் நினைவாக இந்தக் காசை வெளியிட்டுள்ளான் எனக் கருதலாம்.

*காசு–2*

காசின் முன்பக்கத்தில் கப்பல் உருவம் உள்ளது. பின்பக்கத்தில் '**ரா**' என்று நாகரி எழுத்து உள்ளது. 'ராகவா' என்ற பெயரின் முதல் எழுத்து 'ரா' இந்தக் காசில் பொறித்திருக்கலாம். விஜயராகவ நாயக்கர் இந்தக் காசை வெளியிட்டிருக்கலாம். காசின் எடை: **1.4** கிராம், உலோகம்: செப்பு, கிடைத்த இடம்: கும்பகோணம்.



காசு-3

காசின் முன்பக்கத்தில் கப்பல் உருவம் காணப்படுகிறது. பின்பக்கத்தில் செங்குத்தாகக் குத்துவாள் ஒன்றும், இதன் இரண்டு பக்கங்களிலும் சூரியன், சந்திரன் காணப்படுகின்றன. இந்தக் காசும் தஞ்சை நாயக்கர்களாலேயே வணிகத்திற்கு வெளியிடப்பட்டிருக்கவேண்டும். கிடைத்த இடம்: தரங்கம்பாடி, உலோகம்: செப்பு, எடை: **900** மி.கிராம்.



இரகுநாத நாயக்கர் ஆட்சிக்காலத்தில்தான் சோழ மண்டலக் கரையில் ஐரோப்பிய வணிகர்கள் பெரிய எண்ணிக்கையில் வந்து இறங்கி, வணிகத் தலங்களை அமைத்துக் கொண்டு வியாபாரத்தில் ஈடுபடத் தொடங்கி இருந்தனர். ரகுநாதன் கடல் வணிகத்தில் ஆர்வங்கொண்டு, தரங்கம்பாடியில் டேனிஷ்காரர்கள் தம் வணிகக் கூடத்தை நிறுவ அனுமதி வழங்கினான். கடல் வணிகத்தின் முக்கியத்துவத்தை அறிந்து இந்தக் காசுகளை ரகுநாதன் சோழ மண்டலத்தில் வெளியிட்டிருக்கலாம். கி.பி.17-ஆம் நூற்றாண்டில் பயன்படுத்திய கப்பல் வடிவத்தை அறிய இக்காசுகள் பயன்படுகின்றன.

# 25. தஞ்சை நாயக்கர் காசு

காசின் முன்பக்கத்தில் இடது பக்கம் நோக்கி நிற்கும் காளை, காளையின் மேல் சூரியன், சந்திரன் உள்ளது. பின்பக்கத்தில் **'ராமராக(ய)'** என்று இரண்டு வரிகளில் நாகரி எழுத்தில் உள்ளது. எழுத்துகளின் நடுவில் காம்பில் இலைகள், பூ காணப்படுகின்றன. தஞ்சை நாயக்க மன்னன் இரகுநாதன் விஜயநகர மன்னன் இரண்டாம் இராமராயனுக்கு பகைவர்களால் ஏற்பட்ட இடையூறுகளை நீக்கிக் கும்பகோணத்தில் கிபி.1614 வாக்கில் முடிசூடினான். இதன் நினைவாக இந்தக் காசு வெளியிடப்பட்டது. என்று கருதலாம். உலோகம்: செப்பு, எடை: 3 கிராம்.



இராமராக(ய) என்று நாகரி எழுத்தில் பொறிக்கப்பட்ட செப்புக் காசுகள் பல வகைகளில் தஞ்சை மாவட்டத்தில் கிடைக்கின்றன. விஜயநகர மன்னன் இரண்டாம் இராமராயனுக்கும், தஞ்சை நாயக்க மன்னன் இரகுநாத நாயக்கனுக்கும் மிக அதிகத் தொடர்பு இருந்துள்ளதை இங்கு கிடைக்கும் காசுகளே மிகச் சிறந்த சான்றுகளாக உள்ளன.

---


ஆறுமுகசீதாராமன்: 'தமிழகக் காசுகள்',
அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள், பக்-121,
ஆவணம், இதழ்-12, (ஜூலை-2001),
தமிழகத் தொல்லியல் கழகம்.

# 26. தஞ்சை ரகுநாத நாயக்கர் காசு

விஜயரகுனாதன் ஆட்சியில் வெளியிட்ட ஒரு செப்புக்காசு அண்மையில் தஞ்சையில் கிடைத்துள்ளது. காசின் முன் பக்கத்தில் விஷ்ணு அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். பின் பக்கத்தில் **'ரகுனாத'** என்று இரண்டு வரிகளில் தமிழில் பெயர் காணப்படுகின்றது. 'ப' என்ற எழுத்துப் போல் உள்ளதை பிறையாகவும், பக்கத்தில் உள்ளதைச் சூரியனாகவும் எடுத்துக் கொள்ளலாம். காசின் எடை: ***2.6*** கிராம்.





தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தபோது இந்தக் காசை ரகுநாதன் வெளியிட்டுள்ளான். காசின் இரண்டு பக்கங்களிலும் இருமுறை அச்சடிக்கப்பட்டுள்ளன. ரகுநாதன் வெளியிட்ட தமிழ்க்காசுகளில் இதுவரை 'விசையரகுநாதன்' 'ராயரகுனாதன், விசையராயரகுனாதன்' என்ற பெயர்களே காணப்படுகின்றன. ஆனால் இந்தக் காசில் 'ரகுனாத' என்று பொறிக்கப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். இரகுநாதன் சிறந்த ராமபக்தனாகவும், வைணவமதத்தில் அதிக பற்றுள்ளவனாகவும் திகழ்ந்தான்.

# 27. செஞ்சி நாயக்கர் காசு

காசின் முன்பக்கத்தில் ராமர் நின்ற நிலையில் வலது கையில் அம்பு, இடது கையில் வில்லுடன் காணப்படுகிறார். பின்பக்கத்தில் **'ஸ்ரீ கிருஷ்ண'** என்று தெலுங்கு எழுத்துகளில் இரண்டு வரிகளில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம்: திருவண்ணாமலை, உலோகம்: செப்பு, எடை: 1.4 கிராம்,



இந்தக் காசை இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி.1580-1594) வெளியிட்டதாகக் கருதலாம். செஞ்சி நாயக்கர் காசுகளைப்பற்றி நாணயவியலாளர்கள் அதிகமாக ஆய்வு செய்யவில்லை. செஞ்சிநாயக்கர் வரலாற்றிலும் முரண்பட்ட கருத்துகள் உள்ளன. செஞ்சி நாயக்கர்கள் தமிழ், தெலுங்கு, நாகரி போன்ற மொழிகளில் காசுகளை வெளியிட்டுள்ளனர். தாங்கள் வெளியிட்டுள்ள காசுகளில் சைவ மதக்கடவுளர்களையும், வைணவ மதக் கடவுளர்களையும் பொறித்து வெளியிட்டுள்ளனர்.

ஆறுமுக சீதாராமன்: 'தமிழகக்காசுகள்'
அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள், பக்-119,
ஆவணம், இதழ்-12 (ஜுலை-2001),
தமிழகத் தொல்லியல் கழகம்.

# 28. மைசூர் உடையார் காசு

மைசூர் உடையார் அரச பரம்பரையில் கி.பி.*1638* முதல் கி.பி. *1656* வரை செங்கோலோச்சிய அரசர் கண்டீரவ நரசராஜ உடையார். உடையார்களின் அரசபரம்பரையில் இவர் மட்டும் சீரங்கப்பட்டணத்தில் அக்கசாலை அமைத்து, காசுகளை அச்சிட்டு வெளிக்கொணர்ந்துள்ளார். இவரால் சீரங்கப்பட்டணத்தில் இருந்து வெளியிடப்பட்ட காசின் முன் பக்கத்தில் கண்ட பேருண்டபறவை உள்ளது. பின்பக்கத்தில் **'ஸ்ரீபட்டண'** என்று கன்னட-தெலுங்கு எழுத்துகளில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.



சீரங்கப்பட்டணம் என்பதன் சுருக்கமே 'ஸ்ரீபட்டண' என்பதாகும். கண்ட பேருண்ட பறவை தற்காலத்தில் மைசூரின் (கர்நாடகம்) அரசாங்கச் சின்னமாக உள்ளதை நினைவில் கொள்ளலாம்.

---

ஆறுமுகசீதாராமன்: 'மைசூர் உடையார் காசு' பக்-*33*, Coinex-97, Madras Coin Society.

# 29. சேதுபதி மன்னரின் தமிழ்காசுகள்

***காசு-1***

*காசின் முன்பக்கத்தில் வலதுபுறமாக நிற்கும் காளையும், காளையின் மேலே ஒரு லிங்கமும், லிங்கத்தின் மேலே மாலையும், லிங்கத்தின் இடப்பக்கத்தில் சூரியனும், பிறையும் உள்ளன. பின்பக்கத்தில் 'ஸ்ரீ உடைய' என்று தமிழில் இரண்டு வரிகளில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம்: பரமக்குடி, உலோகம்: செப்பு, காசின் எடை: **3.2** கிராம்.*



***காசு-2***

*காசின் முன்பக்கத்தில் இடதுபுறமாக நிற்கும் காளை உள்ளது. காளையின்மேல் சிவன் அமர்ந்த நிலையில் உள்ளார். பின்பக்கத்தில் 'ஸ்ரீ உடைய(ெ)தவ' என்று மூன்று வரிகளில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம்: மதுரை, உலோகம்: செப்பு, எடை: **3.4** கிராம்.*



*திருஉடையத் தேவர் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1711-1725) அச்சிடப்பட்ட சில காசுகளில் ஸ்ரீ உடைய, ஸ்ரீ உடையதெ, ஸ்ரீ உடையதெவ என்றும் பொறிக்கப்பட்டுள்ளன.*

---

*ஆறுமுக சீதாராமன்: 'மறவர் நாணயங்கள்' 9-12-1989-ல் சிவகங்கை வரலாற்றுப் பேரவையில் நடந்த வரலாற்றுக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை.*

# 30. சேதுபதி காசுகள்

**வகை-1**

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் வெளியிட்ட இரண்டு வகை செப்புக் காசுகள் இராமநாதபுரத்தில் கிடைத்துள்ளன. முதல் வகை காசின் முன்பக்கத்தில் இது நான்கு கரங்கள் கொண்ட ஒரு மனிதவுருவம் போன்றும் தோன்றுகிறது. பின் பக்கத்தில் **'செதுபதி'** என்று கி.பி. 17-ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்தில் பெயர் உள்ளது. எடை: 800 மி.கிராம்.



**வகை-2**

காசின் முன்பக்கத்தில் ஆறு கிளைகளுடன் மலர் ஒன்று காணப்படுகிறது. பின்பக்கத்தில் **'செதுபதி'** என்று தமிழ் எழுத்கில் பொறிக்கப்பட்டுள்ளது. காசின் எடை: 800 மி.கிராம்.



தமிழ்நாட்டில் கிடைத்த சேதுபதி காசுகளில் எல்லாம் சைவ, வைணவ தெய்வங்கள் பொறித்த காசுகள் கிடைத்துள்ளன. ஆனால் கிடைத்த இரண்டு காசிலும் உருவங்கள் கிடையாது. சின்னங்களே உள்ளன. தமிழ் ஆற்றல் பெற்ற சேதுபதி மன்னர்களே இக்காசுகளைப் புழக்கத்தில் வெளியிட்டிருக்கலாம்.

# 31. தஞ்சை மராட்டியர் காசு

மன்னார்குடிக்குத் தென்மேற்கே பத்து கி.மீ தொலைவில் மகாதேவப்பட்டணக் கோட்டை உள்ளது. துக்கோசி என்று அழைக்கப்பட்ட முதலாம் துளசா மன்னர் காலத்தில் (கி.பி.1728-36) இங்கு கோட்டை ஒன்று கட்டப்பட்டது. அதனுள் ஒரு அரண்மனை கட்டி நாட்டின் ஒரு பகுதியைத் துக்கோசி ஆட்சிபுரிந்து வந்தார். மகாதேவபட்டணத்தில் ஐந்து வேலி பரப்பில் பெரிய கோட்டை உள்ளது. ஊரின் வடக்கே கிழக்கு நோக்கிச் சம்போ மகாதேவர் கோயில் உள்ளது. அக்கோயிலால்தான் இவ்வூருக்கு மகாதேவப் பட்டணம் என்று பெயர் ஏற்பட்டது. இந்த ஊரில்தான் இந்தக் காசை அச்சடித்து வெளியிட்டிருக்க வேண்டும்.





காசின் முன்பக்கத்தில் **'மாஹதேவ'** என்று நாகரி எழுத்திலும், நடுவில் லிங்கமும் காணப்படுகிறது. பின் பக்கத்தில் **'மஹாராஜ'** என்று நாகரி எழுத்தில் இரண்டு வரிகளில் பெயர் உள்ளது. கிடைத்த இடம் : கும்பகோணம், உலோகம் : செப்பு, எடை : *3.2* கிராம்.

---

ஆறுமுகசீதாராமன் : 'தஞ்சை மராட்டியர் காசுகள்', ஆவணம், இதழ்-7, (ஜூலை *1996*) பக். 87, தமிழகத் தொல்லியல் கழகம்.

# 32. ஆரணி மராட்டியர் காசு

முதலாம் சிவாஜி இறந்த பிறகு ஆரணி தஞ்சை மராட்டியர் ஆட்சிக்கு உரியதாயிருந்தது. ஆரணி ஜாகீருக்கு வெங்கடராவ் என்பவர் கில்லேதாராக இருந்தார். அப்போது தஞ்சையில் துல்ஜாஜி (கி.பி.1763-1787) மன்னராக இருந்தார். அப்போது தஞ்சையில் முகம்மது அலி கி.பி. 1773-76 வரை ஆட்சி செய்யும்போது ஆரணியில் கில்லேதாரராக இருக்கும் வெங்கடராவ், சுயேச்சை நிலை அடைந்து தன்பெயரில் காசுகளை ஆரணியில் வெளியிட்டதாகக் கருதலாம்.



காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் அனுமன் நின்ற நிலையிலும், பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் **'ஸ்ரீவெங்கடராவ்'** என்று நாகரி எழுத்தில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கிடைத்த இடம் : ஆரணி, உலோகம் : செப்பு, எடை : 3 கிராம்.

---

ஆறுமுகசீதாராமன் : 'ஆரணி மராட்டியர் காசு' பக். 34, Coinex - 97, Madras Coin Society.

# 33. தஞ்சை மராட்டியரின் தமிழ் காசுகள்

**வகை-1**

காசின் முன்பக்கத்தில் பத்து தலைகள் உள்ள இராவணனின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் மூன்று வரிகளில் **'மகராசு'** என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. இராவணன் உருவம் பொறித்த காசு தமிழகத்தில் இப்பொழுது தான் முதன் முதலாக கிடைத்துள்ளது. கிடைத்த இடம் : தஞ்சாவூர், உலோகம் : செப்பு, எடை : **2.2** கிராம்.



**வகை-2**

காசின் முன்பக்கத்தில் லிங்கம் ஒன்றும், லிங்கத்திற்கு மேல் மாலையும் உள்ளன. பின்பக்கத்தில் **'ரா-மகாராசு'** என்று மூன்று வரிகளில் தமிழில் பெயர் உள்ளது. ராசராச என்று எழுதுவதற்குப் பதிலாக சுருக்கமாக 'ரா' என்று பொறிக்கப் பட்டுள்ளது. கிடைத்த இடம் : தஞ்சாவூர், உலோகம்: செப்பு, எடை : **2.4** கிராம்.



வகை-*3*

காசின் முன்பக்கத்தில் நரசிம்மம் அமர்ந்த நிலையிலும், பின்பக்கத்தில் 'மகராசு' என்று தமிழ் எழுத்தில் மூன்று வரிகளில் பெயர் உள்ளது. கிடைத்த இடம் : தஞ்சாவூர், உலோகம் : செப்பு, எடை : **2** கிராம்.



தஞ்சை மராட்டிய மன்னர்கள் வெளியிட்டு, கிடைத்த அனைத்துக் காசுகளிலும் நாகரி எழுத்தில் 'மஹாராஜ' என எழுதியிருக்க இக்காசுகளில் மட்டும் தமிழில் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. மராட்டிய மன்னர்கள் நாகரி, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் காசுகள் வெளியிட்டுள்ளனர். தஞ்சை மராட்டியர் காசுகளில் இன்று வரை மன்னர் பெயரோடு காசுகள் கிடைக்கவில்லை.

---

ஆறுமுகசீதாராமன் : 'தஞ்சை மராட்டியர் காசுகள்' பக். *89*, ஆவணம், இதழ்-7, ஜுலை-*1996*. தமிழகத் தொல்லியல் கழகம்.

'தஞ்சை மராட்டியர் காசுகள்' பக்-*32*, Coinex-1998, Madras Coin Society.

# 34. கடவுள் பெயரில் தமிழ் காசுகள்

*காசு-1*

காசின் முன்பக்கத்தில் பாரசீக எழுத்தில் **'வாலாஜா'** என்று உள்ளது. பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் **'ஸ்ரீ ராமா'** என்று தமிழில் உள்ளது. முகமது அலியால் வெளியிடப்பட்ட இக்காசில் கடவுளின் உருவம் பொறிக்காமல் கடவுளின் பெயரை பொறித்துள்ளனர். ஒரே காசில் இரு மொழியையும் பொறித்து முஸ்லீம் - இந்துக்களுக்கு இடையே ஒற்றுமையை வளர்க்கவே முகமது அலியால் (கி.பி.1754-95) தமிழகத்தில் வெளியிடப்பட்டதாகக் கருதலாம். கிடைத்த இடம் : கரூர், உலோகம் : செப்பு, காசின் எடை : **1.4** கிராம்.



*காசு-3*

காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் மயில் உள்ளது. மயிலின்மேல் வேல் ஒன்று உள்ளது. பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் குமரன் து(ணை) என்று தமிழ் எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தக் காசு மதுரை நாயக்கர் அல்லது ஆர்க்காடு நவாபுகளால் கி.பி.18 ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டிருக்கலாம். இக்காசு மேலும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. கிடைத்த இடம் : மதுரை, உலோகம் செப்பு, எடை : **2.4** கிராம்,



---

ஆறுமுகசீதாராமன் : 'ஆர்க்காடு நவாபுகளின் தமிழ் காசுகள்' பக். 157, வரலாற்றுக் கலம்பகம், (பேராசிரியர் செ.ராசு அவர்கள் மணிவிழா ஆய்வுக் கோவை).

'கடவுள் பெயரில் தமிழ்க்காசு' பக். 39, Coinex - 1998, Madras Coin Society.

# 35. திருநெல்வேலி காசு

காசின் முன்பக்கத்தில் யானையின் மேல் ஒரு குடையின் கீழ் மன்னன் அமர்ந்த நிலையில் உள்ளான். பின்பக்கத்தில் **'தினவெலி'** என்று மூன்று வரிகளில் தமிழ் எழுத்தில் பெயர் உள்ளது. கிடைத்த இடம் : திருநெல்வேலி, உலோகம் : செப்பு, காசின் எடை : **2** கிராம்.





மாபூசுகான் (கி.பி. *1752-1759*) திருநெல்வேலியில் ஆளுநராக, சுயேட்சை நிலையில் இருக்கும்போது வெளியிட்டதாக கருதலாம். 'தினவெலி' என்று பொறிக்கப்பட்ட பல வகை காசுகள் திருநெல்வேலியில் கிடைத்துள்ளன. நவாபுகளுக்கு பாரசீக மொழியே ஆட்சி மொழியாயினும் காசில் தங்களது ஊரின்பெயரை பொறிக்கும் போது தமிழுக்கே முக்கியத்துவம் கொடுத்து காசுகளைத் தமிழில் வெளியிட்டுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

---


ஆறுமுகசீதாராமன் : 'தென்னிந்தியக் காசுகள்'
புதிய கண்டுபிடிப்புகள், பக். *124*,
ஆவணம், இதழ் - *9* (ஜுலை *1998*),
தமிழகத் தொல்லியல் கழகம்.

# 36. ஆர்க்காடு நவாபின் தங்கக்காசு

முகமது அலியின் (கி.பி. 1754-95) தங்கக்காசு ஒன்று ஆரணியில் கிடைத்துள்ளது. காசின் எடை : 340 மி.கிராம், காசின் முன்பக்கத்தில் காளியின் உருவம் நின்ற நிலையில் கோடுகளால் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் **'வாலா'** என்று உருது எழுத்துகளில் பெயர் உள்ளது. முகமது அலிக்கு 'வாலாஜா' என்று மற்றொரு பெயரும் உண்டு. இந்த பெயரே இந்தக் காசில் சுருக்கமாக வாலா என்று பொறிக்கப்பட்டுள்ளது.



தென்னிந்தியாவில் தஞ்சை நாயக்கர், மராட்டியர், டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், ஹைதர்அலி, வீரராயன், அனந்தராயன், ஹொய்சளர், விஜயநகர வேந்தர் வெளியிட்ட தங்கக்காசுகளில் (Gold Fanam) இந்தக் காளியின் கோட்டுருவமே உள்ளது. அதனால் காசுகளில் பின்பக்கத்தை வைத்துதான் எந்த வம்சத்தினால் வெளியிடப்பட்டது என்பதை அறிந்து கொள்ள முடியும் எனலாம்.

---

ஆறுமுகசீதாராமன் & சங்கரன் ராமன் — 'ஆற்காடு நவாபின் தங்கக்காசு', பக்.51, Coinex - 96, Madras Coin Society.

# 37. ஆர்க்காடு மன்னர் வெளியிட்ட அனுமன் காசு

ஆர்க்காடு நவாபு முகமது அலிக்கு (கி.பி. *1754-95*) 'வாலாஜா' என்ற பட்டப்பெயர் இருந்தது. அது அந்த அரச வம்சத்துக்கும் பெயராயிற்று. முகமது அலியினால் வெளியிடப் பட்ட ஒரு செப்புக்காசு தஞ்சை வெண்ணாற்றங்கரையில் கிடைத்துள்ளது. காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் அனுமனின் இடுப்புக்கு இரண்டு பக்கத்திலும் **'வாலா'** என்று இரண்டு உருது எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. பின்பக்கத்தில் பல கட்டங்களில் நடுவே நான்கு இதழ் கொண்ட பூ காணப்படுகிறது. காசின் எடை : ***3.4*** கிராம்.





தஞ்சை மராட்டிய மன்னர் பிரதாப்சிங் கி.பி.*1762* - ஆம் ஆண்டு உடன்படிக்கைப்படி கப்பம் கட்டவில்லை என்று குற்றஞ்சாட்டித் தஞ்சையைத் தாக்கினார் முகமது அலி. கி.பி.*1771*, *1773* எனும் இரண்டு ஆண்டுகளில் ஆர்க்காட்டின் ஆக்கிரமிப்பு தஞ்சையில் நிகழ்ந்தது. *1773-76*ல், அதாவது இரண்டரை ஆண்டுக் காலத்துக்கு முகமது அலி தஞ்சையை ஆண்டார். மராட்டியர் காலத்தில் த்ஞ்சையில் அனுமன் வழிபாடு சிறப்புற்று விளங்கியது. அதனால் காசுகளில் அனுமன் உருவத்தைப் பொறித்து வெளியிட்டுள்ளனர். முஸ்லீம்களுக்கும், இந்துக்களுக்கும் இடையே ஒற்றுமையை வளர்க்கவே அனுமன் காசுகள் முஸ்லீம் மன்னர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

---

ஆறுமுகசீதாராமன் : 'முஸ்லீம் மன்னர் வெளியிட்ட அனுமன் காசுகள்' தினமணி, *3.10.1996*.

# 38. ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் செப்புக்காசு

கிழக்கிந்திய கம்பெனியர்களால் வெளியிடப்பட்ட செப்புக்காசு ஒன்று திருநெல்வேலியில் கிடைத்துள்ளது. எடை : 2 கிராம், இக்காசின் முன்பக்கத்தில் நின்ற நிலையில் விஷ்ணுவின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. காசின் பின்பக்கத்தில் **`EEIC'** என்று ஆங்கில எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது.



EEIC என்பதற்கு English East India Company என்று பொருள் கொள்ளலாம். இதன் சுருக்கமே EEIC ஆகும். இந்தக் காசு ஆங்கிலேயர்களால் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வெளியிட்டிருக்கலாம். இந்துக்களிடையே நற்பெயர் ஏற்படுத்தவே ஆங்கிலேயர்கள், இந்துக் கடவுள்களைத் தாங்கள் வெளியிட்ட காசுகளில் பொறித்துள்ளனர்.

---

ஆறுமுகசீதாராமன் : 'கிழக்கிந்தியக் கம்பெனியின் செப்புக்காசு', பக். 36, Coinex-1997, Madras Coin Society.

# 39. இந்தோ-டச்சு செப்புக்காசு

டச்சுக்காரர்கள் வெளியிட்ட செப்புக்காசு ஒன்று கடலூரில் கிடைத்துள்ளது. *1* கிராம் எடையுள்ள இக்காசின் முன்பக்கத்தில் காளியின் உருவம் கோடுகளால் பொறிக்கப்பட்டுள்ளது. (தென்னிந்திய பணங்களில் காணும் உருவம்) பின்பக்கத்தில் '**புதுகாசு**' என்று தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. புதுச்செரி காசு என்பதற்கு பதிலாக சுருக்கமாக புதுகாசு என்று பொறித்துள்ளனர். கி.பி. *1693-1698*ல் புதுச்சேரியில் டச்சு ஆதிக்கம் இருந்தபோது இந்தக் காசுகளை வெளியிட்டிருக்கலாம்.



டச்சுககாராகள் வெளியிட்ட மற்றொரு வகை காசின் முன்பக்கத்தில் கோடுகளால் காளியின் உருவமும் பின் பக்கத்தில் தமிழில் 'நாகபட்டணம்' என்ற பெயரும் பொறித்து வெளியிட்டுள்ளனர். இந்த இரண்டு காசுகளையும் சேர்த்து ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

---

ஆறுமுகசீதாராமன் : 'இந்தோ-டச்சு செப்புக்காசு' பக். *35*,
Coinex-1997, Madras Coin Society.

# 40. இந்தோ - டச்சு வெள்ளிக் காசு

இந்தியாவில் வாணிகம் செய்வதற்காக வந்த டச்சு நாட்டவர், நாளடைவில் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் தலையிட்டு, தம் ஆட்சியையும் நிலைநாட்டி, தம்முடைய காசுகளையும் வெளியிட்டனர். டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி தன்னுடைய ஆதிக்கத்தின் கீழிருந்த எல்லா இடங்களுக்கும் பொதுவான பல்வேறு காசுகளைத் தமது சொந்த நாட்டிலேயே அச்சிட்டு வெளியிட்டு வந்தன.




ஹாலந்து நாட்டில் செயல்பட்ட நாணயச் சாலைகளின் மூலம் பலதரப்பட்ட வெள்ளிக்காசுகளை, அச்சிட்டு வெளியிட்டார்கள். கம்பெனியின் புழக்கத்திற்கென்று வெளியிடப்பட்ட வெள்ளிக்காசுகள் கலையம்சத்தோடு இருந்தன. டச்சுக்காரர்களால் பண்டமாற்று முறைக்காகவும், வியாபார நோக்கத்திற்காகவும், வெளியிடப்பட்ட ஒரு வெள்ளிக்காசு தரங்கம்பாடி அருகே பொறையாரில் கிடைத்துள்ளது. காசின் முன்பக்கத்தில் ஒற்றைச் சிங்கம் உள்ள கேடயமும், கேடயத்தின் மேலே மகுடமும் காணப்படுகின்றன. கேடயத்தின் இருபுறங்களிலும் காசின் மதிப்பு 2 S (ஸ்டூவியர்) என்று உள்ளது. பின்பக்கத்தில் ஆங்கிலத்தில் **`HOLLANDIA'** என்று மூன்று வரிகளிலும், அதன் கீழே 1791 என்று காசு அச்சிட்ட ஆண்டும் குறிக்கப்பட்டுள்ளது. காசின் எடை : 1.6 கிராம்.

டச்சு நாடு ஆறு மாகாணங்களைக் கொண்டது. அதில் ஹாலந்து என்பது ஒரு மாகாணம், அந்த ஹாலந்து மாகாணத்தின் முத்திரைதான் ஒற்றைச் சிங்கம் உள்ள கேடயம், கேடயத்தின் மேலே உள்ள மகுடம் டச்சு அரச சின்னம். காசு அச்சிட டச்சு நாட்டில் அப்போதும் பல நாணயச் சாலைகள் இருந்தன. அதைக் குறிப்பிடும் வகையில், ஒவ்வொரு நாணயச் சாலையும் தனக்கான ஒரு சின்னத்தை நாணயத்தில் முத்திரையாகப் பதித்துக் கொண்டது. இப்பொழுது கிடைத்துள்ள காசு ஹாலந்தில் அச்சிட்டு சோழ மண்டலக் கடற்கரையில் புழக்கத்திற்காக டச்சுக்காரர்களால் வெளியிடப்பட்டதாகும்.